DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 158/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW11 | Caste | : | |
| Name | : | கணபதி | Age | : | 59 |
| F/N | : | சின்னப்பன் | Occupation | : | காவல் ஆய்வாளர், இராணிப்பேட்டை மாவட்டம் நில அபகரிப்பு சிறப்பு பிரிவு |
| Village | : | | | | |
| District | : | இராணிப்பேட்டை | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 20-th day of February 2023.

**<u>20.02.2023</u>**

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் தற்போது இராணிப்பேட்டை மாவட்டத்தில் நில அபகரிப்பு சிறப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.03.2013–ம் தேதி 20.00 மணிக்கு இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின்பேரிலும் இராமநாதபுரம் மாவட்டம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 அவர்களின் நீதிமன்ற D.No. 650 நாள் 18.03.2013 கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண். 10/2013 சட்டப்பிரிவு 260, 466, 468, 471, 420, 120B இதசவின் படி 19.03.2013 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** புகாருடன் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 அவர்களுக்கு அனுப்பினேன்.

**2.** இதர நகல்களை மற்ற உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.03.2013–ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு அ.சா.1 யை விசாரித்தேன். பின்பு 10.06.2013–ம் தேதி எதிரி மனோகரன் என்பவரை அவரின் வீட்டின் முன்பு வைத்து காரணம் கூறி கைது செய்தும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கிராம நிர்வாக அலுவலர் மூர்த்தி மற்றும் கிராம உதவியாளர் ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். **(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு சாட்சிகள் மூர்த்தி மற்றும் ரமேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு

எதிரியுடன் நிலையம் வந்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தினேன். வட்டாட்சியர் கதிரேசன் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அன்புநாதன் ஆகியோர்களை 01.07.2013–ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு சாட்சி சர்புதீன் என்பவரை 02.07.2013ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பணிமாறுதல் காரணமாக நான் இந்த வழக்குக்கோப்பை நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** இந்த வழக்கின் குற்றமானது நீதிமன்றத்தில் நீதிபரிபாலனை செய்யும் போது நடைபெற்ற குற்றம் என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரிவு 340 ன் கீழ் ஒரு முதல் நிலை விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. பிறப்பு, இறப்பு சம்பந்தமான உத்தரவுகளில் அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தான் இருக்கும் என்றால் சரிதான். தாசில்தார் அலுவலகத்திற்கு உத்தரவுகளின் நகல்கள் தான் அனுப்பப்பட்டது என்றால் அதை பற்றி தெரியாது. நான் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பிறப்பு, இறப்பு உத்தரவுகளின் ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக அ.சா.7 மற்றும் அ.சா.8 யை நான் எதிரியின் வீட்டிற்கு வரசொன்னேன் என்றால் சரியல்ல. கைது செய்த பின்பு தான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**2.** ஒப்புதல் வாக்குமூலத்தில் 2–வது எதிரி என்னை அழைத்து சென்றால் ரவிச்சந்திரன் என்பவரை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரிதான். அதன் பேரில் 2–வது எதிரியை அழைத்து சென்று எதிரி ரவிச்சந்திரனை அடையாளம் கண்டீர்களா என்றால் தேடிச்சென்றோம் அவர் கிடைக்கவில்லை. அ.சா.1 யை விசாரிக்கும் போது நீதிமன்றத்தில் இருந்த அசல் ஆவணங்களை கேட்டு விண்ணப்பம் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. அ.சா.1 னிடம் இருந்து மாதிரி கையொப்பம் ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. போலி முத்திரையை குறித்து நான் விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி மனோகரன் தனியாக despatch register பராமரித்தது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. 1–வது எதிரியை நான் கைது செய்யவில்லை என்றால் சரிதான்.

**3.** புகாரில் இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் 10 உத்தரவுகளில் போலி கையெழுத்து மற்றும் போலி நீதிமன்ற முத்திரைகள் போடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் நடந்த முறைகேடுகள் குறித்து நான் விசாரிக்கவில்லை. நீதிமன்றத்தில் பணிபுரியும் ஊழியர்களையும் நான் விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் குறித்து நான் விசாரணை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சரிவர புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல்

சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சண்முகவள்ளி என்பவர் மாவட்ட நீதிபதியிடம் ஒரு புகார் மனு கொடுத்ததின் அடிப்படையில் தான் இவ்வழக்கில் நடந்த முறைகேடு தெரியவந்தது என்றால் சரிதான். சண்முகவள்ளியை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை. இவ்வழக்கின் சம்பந்தப்பட்ட உத்தரவுகளை பெற்று தந்த வழக்கறிஞர்களை நான் விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்.**